முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கபிலர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

02.03.2019, சனிக்கிழமை

1. **யோக சித்தே ஆறுமுக அரங்கா**
   **உலகமெங்கும் கொல்லா நெறி ஊட்டி**
   **யோக வேள்வி அறம் வழி காணும்**
   **உயர் ஞானியே ஞானதேசிகா**
2. தேசிகா என நாமசெபம் போற்ற
   தேசமே ஞானபலம் பெறும் எனக் கூறி
   ஆசிபட **விளம்பி சாலின் திங்கள்**
   **அறிவிக்க மூவாறு திகதி காரி வாரம்**
   **(விளம்பி வருடம் மாசி மாதம் 18ம் நாள் 02.03.2019, சனிக்கிழமை)**
3. **வாரமதில் நித்ய பிரசன்ன ஆசி**
   **வழங்கிடுவேன் கபிலர் யானும்**
   சோரமிலா மக்கள் பலம் பெற
   சுருதிபடி அரங்க நாமசெபம்
4. செபம் பரவ உலக மாற்றம்
   சிறப்பான தொண்டர்கள் மூலம்
   அபயமென சேவை விரிவு கண்டு
   அகிலமே அரங்கர் மயமாகும்
5. ஆகவே உலகளாவிய சேவை
   ஆறுமுகனார் அரங்கர் வழி
   வகைபட அற்புதம்பட நடத்திட
   வணங்கி வரும் மக்கள் வாழ்வு
6. வாழ்வு சிறக்க ஞானிகளின்
   வல்லமையான ஆசி கிட்டும்
   தாழ்வென தீதான வழி செல்பவர்கள்
   தவராசன் பார்வை பட்டுவிட்டால் போதும்
7. போதுமப்பா இழிநிலை விட்டு விலகி
   புண்ணிய வழிக்கு மாறுவர்
   ஆதரவாய் தருமங்களிலும் உதவி
   ஆவரே தருமவான்களாகவே உலகில்
8. உலகமெங்கும் தரும சேவை
   உயிர்க்கொலை நீக்கும் கொள்கையும்
   கலகமிலா மாற்றமாக நடந்துவர
   கட்டுப்பட்டு அரங்கஞானியை ஏற்ற
9. ஏற்ற தேசங்கள் எல்லாம்
   இணையில்லா சக்திபலம் பெற்று

ஆற்றல்பட இணையும் தேசங்களும்
அனைத்து தேசங்களும் ஞான பூமியாகும்

10. ஆகவே ஏழாம் படை வீடு
ஆறுமுகனார் ஞான வீடு
வகைபட ஏற்று வந்திட
வரும் மக்கள் ஞானசித்தி பெறுவர்

11. சித்தி தரும் அரங்கா வாழ்க
செயம் தரும் அரசா வாழ்க
உத்தமமான உயர்நிலை தன்னை
உலகம் உன் தவத்தால் தருமத்தால் அடையுமப்பா நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கபிலர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

யோகங்கள் எல்லாம் பலவாறாய் செய்து வெற்றி கண்டிட்ட யோகசித்தனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உலகமெங்கும் உயிர்க்கொலை தவிர்த்து மக்களுக்கு கொல்லா நெறியினை போதித்து அறத்தின் மூலமாக யோக வேள்வியினை நடத்தி யோகங்கள் செய்தால் அடையும் பலனை அறத்தின் மூலமாகவே அடையும் எளிய முறை ஞானமதை உபதேசித்து மக்களுக்கு உயர் ஞானம் அளித்து காக்கின்ற உயர் ஞானியே ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே உமது திருநாமங்களை மக்கள் எல்லாம் மனம் உருகி தேசிகா ஞானதேசிகா அரங்கமகா தேசிகா என்றே கூறி நாமஜெபங்களை செய்திட உலகமே ஞானபலம் பெற்றிடுமப்பா என்று கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 18ம் நாள் 02.03.2019, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே கபிலர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கபிலர்.

குற்றமற்ற வகையிலே, வீண் போகாது, மக்கள் எல்லாம் அருள்பலம் பெற்றிட வேதங்கள் எல்லாம் போற்றும் மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் நாமஜெபங்களை மனம் உருகி ஜெபித்திடல் வேண்டும். அரங்கமகானின் நாமஜெபம் உலகமெங்கும் மக்கள் செய்து வரவர, உலகமெங்கும் அரங்கனின் தொண்டர்கள் மூலம் தருமசேவைகள் விரைந்து விரிவடைந்து இந்த உலகமே அரங்கர் மயமாகும். உலகமெங்கும் முருகப்பெருமானின் வழிபாடுகளும் சேவைகளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக முறையோடு அற்புதமாய் நடந்து வருகுதப்பா.

ஆறுமுக அரங்கமகானை வணங்கி வருகின்ற மக்களின் வாழ்வு சிறப்படையும், ஞானிகளின் வல்லமைமிக்க அருளாசிகளையும் அவர்கள் பெற்று சிறப்படைவார்கள். தீமையான வழிகளிலே சென்று பாவங்களை சேர்த்து கொண்டவர்கள் கூட, உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அருள் பார்வையில் பட்டுவிட்டால் போதும். அந்த அருள் பார்வையின் அற்புத சக்தியாலே அவர்களது இழிவான நிலை அவர்களை விட்டுவிலகி புண்ணிய வழிக்கு மாறிவிடுவார்கள். அத்தனை சிறப்புமிக்கது ஆறுமுக அரங்கனின் கருணைமிக்க அருள்பார்வை. ஒருமுறை அரங்கன் பார்வை பட்டாலே போதும், பார்வை பட்டவரின் தீமையான குணங்கள் எல்லாம் அவர்களை விட்டுவிலகிவிடும், பாவங்கள் எல்லாம் தொலைந்து போகும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனார் செய்யும் அறப்பணிகளுக்கு தாராளமாய் பொருளுதவிகள் செய்து தருமவான்களாக மக்கள் ஆகிட, அவர்கள் செய்திட்ட தருமங்கள் அரங்கன் மூலமாய் அற்புத சக்தியாக மாறி உலகினில் உள்ள உயிர்க்கொலை எனும் கொடும்பாதக செயல்களை உலகினின்று நீக்கிவிடும். உலகமெங்கும் ஆறுமுக அரங்கனின் தருமசேவைகளும் உயிர்க்கொலை நீக்கும்

கொள்கையும் பரவி கலகங்கள் அற்ற உலகமாக உலகினில் மாற்றங்கள் நடந்து வருகின்றது. சர்வ வல்லமைமிக்க அரங்க ஞானியின் கொள்கைகளை ஏற்று அரங்க ஞானியின் உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டு அரங்கமகானை குருவாய் ஏற்றிட்ட நாடுகள் எல்லாம் இணையில்லா சக்திகளை பெற்று நாடுகளிடையே உள்ள பகைமை மாறி ஒன்றிணைந்து எல்லா தேசங்களும் ஞானபூமியாக மாறிடும்.

ஆதலினாலே முருகப்பெருமான் அமைத்திட்ட வல்லமைமிக்க ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடில் ஞானபண்டிதன் ஆட்சி செய்யும் அரங்கமகானின் ஞானவீடாகும். அப்படிப்பட்ட உயர் ஞானபீடமான ஓங்காரக்குடிலினை உலகோர் ஏற்று பயபக்தியுடன் வருகை தந்து அரங்கமகானிடத்து பணிந்து வணங்கி அரங்கன் கொள்கைகளை ஏற்று பின்பற்றி வருகின்ற மக்களெல்லாம் ஞானத்தில் வெற்றியடைவார்கள்.

சித்திகளை தந்தருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனே வாழ்க வாழ்க, வெற்றிகளைத் தந்தருளும் ஞானஅரசே வாழ்க வாழ்க, இந்த கலியுகம் உத்தமமான உயர்வான நிலையை உம்மால் உமது தவத்தால் உமது தருமத்தால் உறுதியாக அடைந்திடுமப்பா எனக் கூறுகிறார் மகான் கபிலர்.

–சுபம்–